Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

வீடு, வளவு விற்பனைக்கு

மட்டக்களப்பு கல்லடி கடற்கரைக்கு அண்மையில் 18 பேர்சசில் மூன்று படுக்கையறைகளைக் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 065.2223854

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 18 03.09.2004 வெள்ளிக்கிழமை ஓசை 107

# இடம் பெயர்வினால் அவதியுறும் மக்கள் நிலை குறித்து விளக்கம்!

## யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தினார்

(நமது நிருபர்)

**சிறிலங்கா அரசு மேற்கொண்ட நீண்டகால அரச பயங்கரவாதப் போரினால் இடம்பெயர்ந்தும், உயர் பாதுகாப்பு வலயங்களை சிறிலங்கா அரசு அமைத்ததால் தங்கள் குடி யிருப்புக்களை இழந்தும், இன்னும் தமிழர் நிலத்தை சிறிலங்கா அரசு சூறையாடியதால் தங்கள் கிராமங்களை இழந்தும் தற்காலிகமாக முகாம்களிலும் காடுகளிலும் வீதிகளிலும் வாழும் அப்பாவி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.**

அகதிகளை மீளக்குடியமர்த்தும் விடயத்தில் யு.என்.எச்.சி.ஆர். (ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் அமைப்பு) நிறுவனத்தின் தொடர்ச்சியான அளப்பரிய பணியை வெகுவாகப் பாராட்டிய சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், ஏற்கனவே மீளக்குடியமர்த்தப்பட்ட பல ஆயிரம் மக்கள் இதுவரை தமது பொருட்சேதத்துக்கான எந்த வித அரச உதவியையோ அடிப்ப

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## சித்திரவதையிலிருந்து தப்பிவந்த ஆறு சிறார்கள் ஒப்படைப்பு!

(எஸ்.எஸ்.குமார்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்று காலை 9.00 மணியளவில் தமது அலுவலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் 6 சிறுவர்ளை ஒப்படைத்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து தொழிலுக்காக அழைத்துவரப்பட்டு திருகோணமலை கலலறாவு என்னும் இடத்தில் பெரும்பான்மையினத்தவரின் மீன்வாடியில் இவர்கள் தொழிலுக்காக அமர்த்தப்பட்டிரு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தம் கிழக்குப் பல்கலைக்கழக கற்கை நெறிகள் பாதிப்பு

(செ.ஸ்ரீ.கோவிந்தசாமி)

கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வார இறுதி நாட்களில் நடைபெறும் வெளிவாரி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் ஆரம்பப் பிள்ளை பருவப் பராமரிப்புக்கும் அபிவிருத்திக்குமான டிப்ளோமா சான்றிதழ் பாடநெறிகள், புற நிறுவனக் கற்கை அலகினால் நடத்தப்படும் பெண்களும் அபிவிருத்தியும், உளவள வழிகாட்டல், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், அலுவலக முகாமைத்துவம் மற்றும் ஏனைய பாட நெறிகள் தொடர்பான அனைத்து விரிவுரைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.டி.ஹரிஸ் தெரிவித்தார்.

விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பதிவாளர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய சந்ததியினரே விடுதலையை வென்றெடுக்க வேண்டும்

### பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா

(நமது நிருபர்)

எமது தேசியத் தலைவரின் தியாக சிந்தனையில் உருவான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இதனை அடுத்த சந்ததியினரது கைகளில் ஒப்படைக்காது இன்றைய சந்ததியினரே விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

இவ்வாறு பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வர்த்தகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

களுவாஞ்சிகுடி கிராம

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பல்வேறு துறைகளிலும் மூலை கற்களாக நின்று சமூகத்தை முன்னேற்ற வேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி

(நமது நிருபர்)

பல வருடங்களாகக் காத்திருந்த பட்டதாரிகளுக்கு இப்போது தான் விமோசனம் ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு கிடைக்கப்போகும் நியமனங்கள் வெறுமனே ஜீவனோபாயத்துக்காக மட்டும் உரியதல்ல.

இந்த நியமனத்தின் மூலம் இவர்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளில் மூலைக்கற்களாக நின்று சமூகத்தை நெறிப்படுத்த வேண்டியவர்கள். எனவே பண்பும்,பணிவும், ஆளுமையும், அடக்கமும்,தனித்துவமும், தலைமைத்துவமும் இவர்களது முத்திரைகளாக அமையவேண்டும்.

இவ்வாறு நேற்று பட்டதாரி அரசசேவையில் இணையும் முன்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## தமிழீழ காவல்துறை மேலதிக விசாரணை

(நமது நிருபர்)

படுவான்கரைப்பகுதியில் மாடு களவாடி விற்பனை செய்ததின் பேரில் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இரு நபர்களும் மேலதிக விசாரணைக்காக தமிழீழக் காவல்த் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த 31ம் திகதி கோயில் போரதீவு கோடைமடு வாவியூடாக மாடுகளைக் களவாடி கடத்திச் செல்ல முற்பட்டபோது விடுதலைப் புலிகளால் இரு நபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா படை தளபதி குடாநாட்டுக்கு விஜயம்

(நமது நிருபர்)

சிறிலங்காவின் இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட நேற்று யாழ்குடா நாட்டுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டுக்கு சென்றுள்ள இராணுவத் தளபதி முகமாலை, நெடுந்தீவு, போன்ற உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு சென்று படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று கொழும்பு திரும்பு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## விடுதலைப்புலிகளின் ஏற்பாட்டில் வர்த்தக சங்கங்கள் அமைப்பு

(நமது நிருபர்)

கோட்டைக்கல்லாறு, பெரிய கல்லாறு, ஓந்தாச்சிமடம் ஆகிய இடங்களில் வர்த்தக சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சோழன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்த வர்த்தக சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஓந்தாச்சிமடம் வர்த்தக சங்கத்தின் தலைவராக அ.சிதம்பரப்பிள்ளை, செயலாளராக செ.பாக்கியமூர்த்தி, பொருளாளராக அ.தியா

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சுயவிருப்பில் இணையவந்த சிறுவன் மீள ஒப்படைப்பு!

(நமது நிருபர்)

சுயவிருப்பில் இணைய வந்த சிறுவன் ஒருவனை விடுதலைப்புலிகள் மீள பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

முனைக்காட்டைச் சேர்ந்த யோகராசா சந்திரகுமார் (13) எனும் சிறுவனே அவரது தாயாரான பரமேஸ்வரி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுமாலை கொக்கட்டிச்சோலை மணல்பிட்டியிலுள்ள மாவடிமுன்மாரிக் கோட்ட அலுவலகத்தில் வைத்து விடுதலைப்புலிகள் சிறுவனை ஒப்படைத்தனர்.

### இன்றைய நாளில்

**தகவல்துளி**


1910இல் In Old Califonia என்ற திரைப்படம் முதன் முதலில் கொலிவூட்டில் தயாரிக்கப்பட்டு அமெரிக்காவில் திரையிடப்பட்டது.

# அரசியல்வாதிகள் சுயலாபம் கருதாது இணக்கப்பாடு ஒன்றுக்கு வர வேண்டும்.

## -மல்வத்தை மகாநாயக்க தேரர்-

நமது நிருபர்)

**நாட்டின் இன்றைய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைக் கண்டு நாட்டில் நிலை யான சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் சுயலாபம் கருதாது பொது இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும் அன்றேல் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும்.**



(

இவ்வாறு கண்டி மல்வத்த மகாநாயக்க சிம்பத்துவேவ சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டொக்டர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் தெரிவித்துள்ளார். புதன்கிழமை காலை கண்டி மல்வத்த மகா நாயக்க தேரரைச் சந்தித்து கலந்துரையாடிய போது மகாநாயக்க தேரர் அவரிடம் இதனை தெரிவித்தார். குறிப்பிட்டவர்களுக்கு என்று கௌரவத்தை தேடிக் கொள்ளும் வகையில் செயற்படுவதை விடுத்து அழிவுக்குள்ளாகியி ருக்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்டு பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக ளுக்கு தீர்வுகாண வேண்டும். நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை இந்த நாட்டு மக்களே தெரிவு செய்துள்ளார்கள். அவர்களை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று. மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஜயலத் ஜயவர்த்தன உரையாற்றுகையில், நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் சிங்களவர்கள் தமிழர்களின் இரத்தத்தைக் குடிப்பவர்கள் என்ற கருத்து வடக்கில் உள்ள சில தமிழர்கள் மத்தியில் நிலவியது. ஐக்கிய தேசியக் கட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ததையடுத்து தெற்கு மக்கள் வடக்கிற்கும், வடக்கு மக்கள் தெற்கிற்கும் சென்று வரும் ஒரு சமாதான நிலை உருவானது. எனவே ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டும். இதன் பொருட்டு ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட தயாராகவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானிப்பு

(நமது நிருபர்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங் கைக்கான வதிவிட பிரதிநிதி வூட்டர் வில்டன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையினை கண்கா ணிக்கும் யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் நடவடிக்கைகளை தாம் கண்காணித்து வருவ தாக குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர் வே தரப்பின் நடவடிக்கைகளையும் தாம் வெகு உன்னிப்பாக அவதானித்துவருவதாக தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தத்தை உரிய முறையில் இரு தரப்பினரும் கடைப் பிடிக்கின்றார்களா? என்பது குறித்து பக்கச் சார்பற்ற முறையில் யுத்தநிறுத்த கண்கா ணிப்பாளர்கள் அவதானிக்க வேண்டும். அவர் களது நடவடிக்கைகள் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையினை பாதிக்கும் வகையில் அவர்கள் நடந்து கொள்ள கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புல்மோட்டையில் புதிய காவலரண் அமைப்பு

(எஸ்.குமார்)

கடற்படையினர் திருகோணமலை புல்மோட்டை வீதியில் துவரங்காட்டுச் சந்தியில் புதிய காவலரண் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது விடயமாக யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கு இப்பகுதி வாழ் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இது விடயமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனும் முறைப்பாடு செய்துள்ளார்.

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு பிரான்ஸ் வலியுறுத்தல்

(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க தாம் அரசாங்கத்தை வலியுறுத்தப் போவதாக பிரான்ஸ் நாட்டின் உதவி தூதுவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரான்ஸ் நாட்டின் உதவி தூதுவர் கொயோல்ட் டி மெஸ்சோனா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை கொழும்பில் சந்தித்தார். இச்சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே கொலைகளில் ஈடுபடுவதாக கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். பேச்சுவார்த்தைகளை இடைக் கால தன்னாட்சியின் அடிப்படையில் ஆரம் பிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் தயாராகவே உள்ளனர். இந்நிலையில் இலங் கை அரசாங்கம் உடனடியாக பேச்சுவார் த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட உலக நாடுகள் வலியு றுத்தல் விடுக்க வேண்டும் என்ற கோரிக்கை யையும் கூட்டமைப்பினர் சந்திப்பின் போது முன்வைத்தனர். சிறுவர்கள் படைகளில் சேர்ப் பது தொடர்பாக தொடந்தும் தமிழீழ விடுத லைப்புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்ற போதும், அவ்வாறான நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்வ தில்லை எனவும் அவர்கள் பிரான்ஸ் நாட்டு உதவி தூதுவரிடம் தெரிவித்தனர்.

# அரசியல் பரவலாக்கல் மூலமே இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம்

## -பேராசிரியர் விதாரண-

(நமது நிருபர்)

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் திட்டமே உள்வாங்கப்பட வேண்டிய சூழல் தற்போது நிலவுவதாகவும், அரசு இதைப் புரிந்து கொண்டு, உடனடியாக அதிகாரப் பரவலா க்கல் திட்டத்தின் கீழ் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிப்பது அவசியம் என்றும் பேராசிரியர் கருத்துக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள திட்டத்தையும், அரசு தயாரிக்கும். இதற்கு நிகரான இன்னுமொரு திட்டத்தையும் முன் வைத்து, அதிகாரப் பரவலாக்கல் முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்து ள்ளார்.ஆகக்கூடிய பிராந்திய அதிகார ங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலமே, தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம் என்பதை அரசும், சிங்கள மக்களும் புரிந்து கொள்வது அவசிய மென்றும், இரு பெரும்பான்மைக் கட்சிகளும் இணைந்து இவ்விடயத்தில் தீர்வுகாண ஒத்துழைப்பது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த உற்சவம்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு கரடியனாறு குகலா னமலை ஸ்ரீ குமரன் ஆலய 11வது வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9ம் திகதி வியாழக் கிழமை சாந்தி பூசை ஆராதனையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

இவ்வுற்சவத்தினை முன்னிட்டு 11ம் திகதி சனிக்கிழமை மாம்பழத்திருவிழாவும், சுவாமி ஊர் உலாவும் சின்னப்புல்லுமலை, விநாயகர்ஆலயம் கரடியனாறு இலுப்படிச் சேனை வேப்பவட்டவான் ஊடாக நடைபெறும் விழாக்காலங்களில் விசேட பூசைகள், கூட்டுப்பிரார்த்தனைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும்.

## திருமலையில் கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் அமைப்பது பற்றி ஆராய்வு

(நமது நிருபர்)

திருகோணமலையிலிருந்து நிலாவளி நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கோணேசபுரி என்ற இடத்தில் இந்த புதிய வளாகம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவி க்கப்படுகின்றது.

தற்போது திருகோணமலை நகரில் இந்த வளாகம் போதிய இடவசதிஇன்றி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. புதிதாக அமைக்கப்படவுள்ள வளாகம் 200 ஏக்கர் பர ப்பில் மிகப் பிரமாண்டமாக உருவாக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வளாகம் அமைக்கப்படுவது தொடர்பில் ஒரு நாள் செயலமர்வு இன்று திருகோண மலை நகரில் நடத்தப்பட்டள்ளது.இதில் பொது மக்கள் மாணவர்கள் அரசாங்க அதிகாரிகள் கல்வி மான்கள் என பலதரப்பு பிரதிநிதிகளும் கல ந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## செய்தித் துளிகள்

### பிற்போடப்பட்டுள்ளது

(செங்கலடி நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வார இறுதி நாட்களில் இடம்பெறும் வெளிவாரி கற்கை நெறிகள், ஆரம்பப் பிள்ளைப் பருவப் பராமரிப்புக்கும் அபிவிருத்திக்குமான டிப் ளோமா, சான்றிதழ் பாடநெறிகள், புற நிலைக் கற்கைகள் அலகினால் நடா த்தப்படும் பாடநெறிகள் மற்றும் ஏனைய பாடநெறிகள் தொடர்பான அனைத்து விரிவுரைகளும் கல்வி அணி சாரா ஊழியர் களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் காரணமாக மறுஅறிவித்தல் வரை பிற்போட ப்பட்டுள்ளன. விரிவுரைகள் ஆரம்பமாகும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### கவிதை நூல் வெளியீடு

(மருதமுனை நிருபர்)

பிரபல எழுத்தாளரும் கவிஞருமான ஒலுவில் அமுதனின் 9வது நூலான ஒலுவில் அமுதனின் கவிதைகள் கவிதை நூல் விரை வில் வெளிவரவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பா டுகள் துரிதமாக நடைபெற்றுவருவதாக கவி ஞரும் எழுத்தாளருமான ஒலுவில் அமுதன் தெரிவித்தார்.

### வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

(அன்ஸார்)

காத்தான்குடி கூட்டுறவுக் கல்லூ ரியின் வருடாந்த இல்ல விளையாட்டுவிழா 03ம் திகதி வெள்ளிக்கிழமை இன்று காத்தான்குடி ஹிஸ்புல்லா பொது விளை யாட்டு மைதானத்தில் பி.ப.2.30 மணிக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் ஏம்.பி.ஹயாத் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ. இராஜரெத்தினம் கௌரவ விருந்தினராக முகைதீன் மெத்தை பெரிய ஜும்மா பள்ளி வாயல் பிரதம நம்பிக்கையாளர் மர்சூக் அஹமட் லெப்பை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் மாணவர்களின் பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

### வழக்குத் தாக்கல்

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் சட்ட விரோதமாக மின் இணைப்பைப் பெற்று வந்த சுமார் 204 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதி ராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாக கல்முனைப் பிரதேச மின்சார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.மகே ந்திரன் தெரிவித்தார்.

### மின் துண்டிப்பு

(மருதமுனை நிருபர்)

அக்கரைப்பற்று சதோச றிடைல் லிமிட்டட் கிளையில் 2004.08.25ம் திகதி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இக் கிளை நிறுவனம் மாதாந்த மின் கட்ட ணத்தை ஒழுங்காகச் செலுத்தியுள்ளது.

முன் இக்கட்டடத்தில் இயங்கி வந்த நிறுவனங்களின் மின்சாரக் கட்டண நிலு வைகள் செலுத்தப்படாதுள்ளதாலேயே மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சதொசவில் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

### கூட்டுறவாளர் தின விழா

(நமது நிருபர்)

82வது சர்வதேச மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவாளர் தின விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மட் கூட்டுறவு தேவநாயகம் கலையரங்கத்தில் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் ஆர்.இராயப்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

# ஒருதொழில்வாய்ப்பின்றி இளைஞர்கள் மனம் போன போக்கில் வாழ்கின்றனர்.

## -பிராந்திய ஆணையாளர் அருளையா-


நமது நிருபர்

''இன்றைய சூழ்நிலையில் தமக்கென ஒரு தொழில்வாய்ப்பின்றி இளைஞர்கள் மனம் போன போக்கில் வாழ வழிப்படுகின்றனர். இவர்களது நடவடிக்கைகளைத் தடுக்கவும், வாழ்க்கையை சுபீட்சமடையச் செய்யவும் வடகிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களம் நவீன மயப்படுத்தப் பட்ட தொழில் பயிற்சியினை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது'' என்று தொழில் துறைத் திணைக்களத்தின் பிராந்திய ஆணையாளர் டாக்டர். டபிள்யூ.எஸ். அருளையா தெரிவித்தார்.

வடகிழக்குமாகாண தொழில் துறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த குளிர்சாதனப் பெட்டி திருத்தல் பயிற்சி நெறிக்கான பயிலுனர்களை ஒன்று சேர்த்து பயிற்சி நெறியின் ஆரம்ப விழா அண்மையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ,எச்.எம்.அன்சார், முகாமைத்துவ உதவியாளர்களான ஐ,எல்.முகைதீன், ஏ.ஜெலீல் மற்றும் எம்.ஏ.அஹமட், பயிற்சி ஆசிரியர், பயிற்சி மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்ட இவ் விழாவில்பிராந்திய ஆணையாளர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

படித்துவிட்டு தமக்கென ஒரு வழிகாட்டியின்றி வாழ்வின் இலட்சியத்தை விட்டும் இளைஞர்கள் திசைதிரும்பி வருகின்றனர். இவ்வாறான இளைஞர்களை நெறிப்படுத்தவும், நேர்வழிப்படுத்தவும் வடகிழக்குமாகாண தொழில்துறைத் திணைக்களம் அறிவு, திறன், மனப்பான்மை ஆகியவற்றை ஒருமித்து செயற்படவென தற்காலத்துக்குத் தேவையான குளிர் சாதனப் பெட்டி திருத்தல் பயிற்சி நெறியினை அறிமுகப் படுத்தியுள்ளது. அதற்கமைவாக நேர்முகப் பரீட்சையின் மூலம் திறமையின் அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்பட்வர்களுக்கு இப்பயிற்சியினைத் தொடர அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்றார்.



மருதமுனை சுற்றயற்கூறு வைத்தியசாலையில் மருத்துவ பார்வையிடல் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் சமீபத்தில் நடைபெற்றபோது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்ளார்அடிக்கல் நாட்டுவதையும், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (படம்:மருதமுனை நிருபர்)

# மருதமுனை கிராம மீனவர்களால் சிரமதானம் மூலம் வீதிபுனரமைப்பு

(மருதமுனை நிருபர்)

கல்முனைப் பிரதேச செயலக சமூர்த்திப் பிரிவின் அனுசரனையுடன் நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த மருதமுனை அக்பர் கிராம மீனவர் வீதி சமூர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்களால் சிரமதானத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அக்பர் கிராம சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எ. கமலாவின் முயற்சியினால் கல்முனை பிரதேச செயலக சமூர்த்திப் பிரிவு ஒரு தொகை நிதியை இவ்வீதி நிர்மானப் பணிக்கு ஒதுக்கியிருந்தது.

வீதி நிர்மாண ஆரம்ப வைபவத்தில் கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வீதி நிர்மாணப் பணியை ஆரம்பித்து வைத்தார் பிரதம சமூர்த்தி முகாமையாளர் ஏ.வூர்.எம்.சாலி தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் எம். அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அட்டாளைச்சேனையில் தகவல் தொழிநுட்ப நிலையம் அமைக்க கோரிக்கை

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதச இளைஞர்களின் நலன் கருதி தகவல் தொழிநுட்ப நிலையம் ஒன்றை அமைக்கக் கோரி அட்டாளைச் சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வீடமைப்பு நிர்மானத் துறை, நீர்ப்பாசன, கிழக்கக் கல்வி அபிவிருத்தி அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான திருமதி பேரியல் அஷ்ரப் அவர்களுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அட்டாளைச்சேனைப் பிரதேசமானது அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாவி, திராய்க்கேணி, ஆலங்குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய மூவின மக்களும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் அதிகமான இளைஞர்கள் படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி மனம்போன போக்கில் செல்கின்றனர். இவ்வாறான இளைஞர்களை நேர்வழிப்படுத்தவும், தொழில்க்கல்வியினை வழங்கவும் தகவல் தொழிநுட்பத்துறை மிகச்சிறந்த தொன்றாகும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர்,செயலாளர்கள் ஒப்பமிடப்பட்டு மேற்படி கடிதத்தினை அனுபபிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வவுனியா பிராந்திய இணைப்பதிகாரியாக சபாபதி

(வன்னி நிருபர்)

சிறிலங்காப் படையினரின் வவுனியாப் பிராந்திய படை சிவில் இணைப்பதிகாரியாக நேற்றுமுன்தினம் முதல் முன்னைய யாழ் மாவட்டத்தின் துணைத் தளபதியாக பணியாற்றிய இரத்தின சபாபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வவுனியாவில் நீண்ட காலமாக படையதிகாரியாகச் செயற்பட்ட சேனநாயக்கா இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தில் கூரைத் தகடு பெற தகைமையுடையோர் விபரம் அறிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

இந்திய கடன்திட்டத்தின் கீழ் தருவிக்கப்பட்ட 72 ஆயிரம் கூரைத் தகடுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் 15.09.2004 வரை ஏற்றுக் கொள்ளப்படுமென அரசாங்க அதிபர் ஹேரத் அபேதீர அறிவித்துள்ளார்.

கூரைத்தகடுகளைப் பெற பின்வரும் தகமைகளை ஒருவர் கொண்டிருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

1. வீடு அமைந்திருக்கும் காணியின் உரிமை விண்ணப்பதாரியினுடையதாயிருத்தல் வேண்டும்.
2. வீட்டுக்கு நிரந்தரமான கூரையில்லாமலிருக்க வேண்டும்
3. கூரை மட்டம் வரை வீடுகட்டப் பட்டிருந்தும் நிரந்தரமான கூரை அமைப்பதற்கு கட்டிடப் பொருட்கள் பெற்றுக் கொள்ளும் சக்தி இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
4. அரச மானிய வேலைத் திட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் கூரைக்கான கட்டிடப் பொருட்கள் பெற்றுக் கொள்ளாத குடும்பமாக இருத்தல் வேண்டும்.

இவ்வறிவித்தல் சகல பிரதேச செயலகம் மூலம் பலவகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கூரைத்தகடு பெற எலவே விண்ணப்பித்தவர்களும் மீண்டும் இத்திட்டத்தின் கீழ் கட்டாயம் விண்ணப்பித்தல் அவசியம். கிராம சேவையாளரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பின் பூர்த்தி செய்து ஒப்படைத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

# தமிழ் முஸ்லிம் இளைஞர்களிடையே நட்புறவை வளர்க்கும் பாசறை

(பூ.பிரசாந்தன்)

மட்டக்களப்பு மாவட்ட சகவாழ்வு மன்றத்தின் பூரண அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தமிழ் முஸ்லிம் இளைஞர்களிடையே சகவாழ்வை ஏற்படுத்தும் நிகழ்வின் முதல் கட்டமாக வாழைச்சேனை, ஓட்டமாவடி எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த 50 இளைஞர் யுவதிகள் தேர்வு செய்யப்பட்டு இவர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப் பாசறை 28.08.2004, அன்று ஓட்டமாவடி அந்நூர் தேசிய பாடசாலையில் மட்- சகவாழ்வு மன்ற இணைப்பாளர் சாந்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது இங்கு தமிழ்முஸ்லீம் இளைஞர்களிடையே இன ஐக்கியத்தினையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் கலந்துரையாடல் பயிற்சிகள் நடாத்தப்பட்டதுடன் குழுக்களும் அமைக்கப் பட்டன இந்நிகழ்வினை கழக இணைப்பாளர் எம். ராஜன் ஒழுங்கமைத்ததுடன் சகவாழ்வு மன்றத்தின் கழக இணைப்பாளர் முபீன், சதாத் ஆகியோருடன் மனித உயர் பாதுகாப்புத் திட்ட இணைப்பாளர் திரு. நிறாஜ் டேவிட் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் பூ. பிரசாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## வடக்கு கிழக்கில் அகவிழி நூல் விநியோகம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்விச் சஞ்சிகையான அகவிழியின் முதற் பிரதி வட கிழக்குப் பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பிலிருந்து வெளியாகும் அகவிழி சஞ்சிகையின் நிருவாக ஆசிரியர் ரி.மனோராஜசிங்கம், நிருவாக சபை உறுப்பினர் காசுபதி நடராஜா ஆகியோர் வட கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தைச் சந்தித்துப் பிரஸ்தாப சஞ்சிகையை ஒப்படைத்தனர்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் எழுதிய நவீன கல்வி முறையியலில் ஆசிரியரின் மாறிவரும் வகிபாகம் எனும் கட்டுரையும், பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய கல்வி எனும் பல்கடல் பிழைக்கும் என்ற கட்டுரையும் அகவிழி ஆக்கங்களில் சிலவாகும்.

மேலும் கல்வியியலாளர்களான மா.சின்னத்தம்பி, தை.். தனராஜ், மா.கருணாநிதி, கோகிலா மகேந்திரன், அரவிந்தன் ஆகியோர் இம் முதல் வரியில் எழுதியுள்ளனர்.

முழுக்க முழுக்க கல்வியை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து மாதா மாதம் அகவிழி மலரும் என ஆசிரியர் தெ.மதுசூதனன் தெரிவித்தார். கல்விப் புலத்திலுள்ளோர் அகவிழிக்கு ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

## மாவடிப்பள்ளியில் கணித விளையாட்டு விழா

(எம்.எம்.முஸ்தபா)

மாவடிப் பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் கணித விளையாட்டு விழா ஒன்று அதிபர் வைசீம் சுதீன் தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது, உடற்கல்வி ஆசிரியர் எம்.எம்.இல்யாஸ் அவர்களின் ஏற்பாட்டில் கல்விக் கல்லூரி பயிற்சி ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இப்போட்டியில் பிரதம அதிதியாக உப பீடாதிபதி எம்.ஏ.எம்.ஜெலீல், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். போட்டி இறுதியில் பயிற்சி ஆசிரியர்களான எம்.ஜே.தாரிக், றபி அமான் ஆகியோர் உரையாற்றினர். முற்றாகக் கணிதத்தைக் கொண்ட விளையாட்டுக்கள் இப்போட்டியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவர்களை ஆட்சேர்ப்பு

(விரி.சகாதேவராஜா)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகம் 2004 கல்வியாண்டுக்கான வெளிவாரி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கலை மானி, வணிக முகாமைத்துவ மானி, வர்த்தக மானி ஆகிய பட்டப் படிப்புத் துறைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. க.பொ.த (உ.த)பரீட்சையில் குறைந்த 3 பாடங்களில் எஸ் தரசித்தியை பெற்றிருத்தலுடன், பல்கலைக் கழக அனுமதிக்கான தகமையையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

தமிழ், ஆங்கில மொழி மூலத்தில் பட்டப்படிப்பு நடைபெறும். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 30ம் திகதிவரை ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த படிவங்கள் 08.10.2004க்கு முன் அனுப்ப வேண்டுமென பதில் பதிவாளர் தையூப் அறிவித்துள்ளார்.

## எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்

(கர்சனன்)

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அதிகார சபை பல்வேறுபட்ட நிகழ்சித் திட்டங்களை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 8ம் திகதி சர்வதேச எழுத்தறிவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. முக்கியவேலைத் திட்டமாக 5 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு அவர்களைப் பாடசாலையில் இணைத்தல், 8 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை இனம் கண்டு பிரதேசத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் ஒன்றிணைத்தல் போன்றவைஆகும்.

# சங்ககால சமூகமும் இலக்கியமும் ஒரு மீள்பார்வை

## இலக்கியச் சுடர்

மிதுனன்

### கண்ணா நீ வருவாயா?

ஆண்டவர்கள் சீருடன் சொந்த மண்ணை
அன்றொரு சகுனியின் சூழ்ச்சியாலே
தீண்டாத சூதாட்டம் தீண்ட ஆடி
துணைவி யோடனைத்தையும் அடகு வைத்து
பூண்டார்கள் ஆறிரு ஆண்டினோடு
புன்மைசேர் அஞ்ஞாத வாச வாழ்வை!
மீண்டவர்கள் தங்களது உரிமை கேட்க
மறுத்தனர் கௌரவர்கள் நீதி நல்க!

❁❁❁❁

பாண்டவர்கள் பாதியைக் கேட்டதாலே!
மூண்டது பாரதப் போரே அன்று!
நீண்டதோர் இதிகாசக் கதையில் நீதி
நியாயத்தை நாட்டிட வேண்டி இந்தக்
கண்ணனே! காரண கர்த்தாவாக
காண்டீபன் கடமையை துணிந்து செய்ய
எண்ணில்லாக் கருப்பொருள் ஞானமார்க்க
இனிய நற் கீதையை உபதேசித்தான்!

❁❁❁❁

நடந்தது பாரதம் அந்தக் காலம்!
நமக்கிது பாடமா இந்தக் காலம்?
தொடர்ந்தது முடிவதாய் தெரியவில்லை!
துரியோதனர்களும் மடியவில்லை!
படர்ந்த தீ வீழ்ந்தோரை எரிக்கும் போது
பரந்தாமன் மௌனமாய் இருக்கலாமோ?
கடந்ததைக் கண்டவன் காக்கும் தெய்வம்!
கடமையால் தர்மத்தை நாட்டுவானோ?

❁❁❁❁

ஆண்டவன் பூமியில் எந்த நாளும்
ஏண்டவன் கொடுமைகள் அதிகரிக்க
மாண்டவர் கணக்கில்லாக் கதையிருக்க
மண்ணுக்காய் போராடும் துயரவாழ்வில்
தூண்டுகோலாகவே இருப்போரிந்த
தேசத்தை நாசமாய் கெடுக்கும் போது
மீண்டும் நீ வருவாயா? கண்ணா எங்கள்
விடிவுக்கு வழிகாட்ட விழித்தெழுந்து!

-கவிஞர் சிகண்டிதாசன்-

## குறும்பா

பெண்ணொருத்தி 'பஸ்'ஸினிலே நின்று
பிரியமுறத் தழுவிவிட்டாள் கன்று
அன்னவளின் அணைப்பினிலே
அசந்து விட்ட மடையனிவன்
பின்னுழன்றான் 'பேஸ்' தொலைந்ததென்று!

சந்தியெல்லாம் மேடை போட்டு ஏறி
சமாதானம் செய்வொமென்று கூறி
பந்தியெல்லாம் பேச்சு வார்த்தை
பகலிரவாய்ச் செய்த பின்னும்
பிந்திவிட்ட புலாலாச்சு நாறி!

பெண்ணவளைப் பார்த்து விட்டுக் காளை
பெருமையுடன் கொடுத்தவனோ நாளை
இன்னுமொரு பெண் வரவே
இசைந்தனனே சீர் பெறவே
தன்னெலும்பைத் தொலைத்து விட்ட கோழை!

பெண்ணவளின் மின்னலிடை சாற்றி
பெருங்கவிகள் எழுதி வைத்தார் போற்றி
அன்னவளின் முதிர்வயதில்
அழகு எல்லாமுதிர்ந்து விட
சின்னவனும் பேசிடுவான் தூற்றி!

முன்னும் பின்னுமிழுக்குமிந்த மூச்சு
முடிவு வரைத் தொருங் கதை யாச்சு
இன்னுமிதை எவருணர்ந்தார்
இறைவன்தனை யார் நினைந்தார்
மின்னலென உயிர் பிரிந்தால் போச்சு!.

-கவிஞர்ஒலுவில் எஸ்.ஜலால்டீன-

**சென்றவாரத் தொடர்ச்சி..**

ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் கிடைத்த கூரிய கற்கள் இவ்வாறு அவர்களுக்கு உதவின. இடைக்கற்காலத்தில் அக்கற்களைக் கூராக்கி அல்லது துளையிட்டு உபயோகிக்கக் கற்றுக் கொண்டனர். புதிய கற்காலத்தில் அவற்றை மேலும் கூராக்கி கம்பின் நுனியிலும் அம்பின் நுனியிலும் பொருத்தி நீண்ட தூரம் ஏவக் கற்றுக் கொண்டனர். பின்னரே உலோகங்களை முக்கியமாக இரும்பைக் கண்டு பிடித்தனர். அதன் பின்னர் தான் மனித நாகரிகம் விரைவாக முன்னேறத் தொடங்கியது.

உலக வரலாற்றில் நாகரிகமடைந்த இனங்களின் வரலாறுகள் யாவும் இப்பின்னணியில் விளக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் புராதன வரலாறும் இப்பின்னணியில் எழுதப்படும் போது தான் ஏற்புடமை ஏற்படும். அல்லாவிடின் நாம் ஐதிகக் கதைகளில் வாழுகின்ற ஓர் இனமாகவே கணிக்கப்படுவோம். மேற்குறிப்பிட்ட பின்னணியில் தமிழ் நாட்டில் நடந்தேறிய அகழ்வாராய்வுகளில் முக்கியமான சிலவற்றை முதலில் நோக்குவோம்.

**பழங்கற்காலச் சின்னங்கள்:-**

புராதன இந்திய வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படும் றொபட்புறூஸ் பூட் என்ற மண்ணியலாளர் 1863இல் சென்னைக்கருகில் பலியொலிதிக்காலம் (பழங்கற்காலக்) கைக்கோடரி ஒன்றைக் கண்டெடுத்ததார். அவர் அதனை இரண்டு லட்சம் வருடங்களுக்கு முந்தியதுஎன்று கணிப்பிட்டார். பஞ்சாப்பின் சோன் பள்ளத்தாக்கிலிருந்த கற்கால மக்களை விட முன்னேறிய மக்களாக சென்னை மக்கள் இருந்திருக்க வேண்டும் என்று இவர் கருத்துரைத்தார்.

சோன் பள்ளத்தாக்கு மக்கள் தமது எதிரிகளைத் துரத்த மாத்திரமே கல்லை உபயோகித்திருந்தனர். ஆனால் சென்னைப் பழம் மக்களோ ஒரு காரியத்திற்காகக் கல்லையே மாற்றம் செய்துள்ளனர். ஆதலால்அவர்களை விட இவர்கள் முன்னேறியவர்கள் என்பது இவர் கருத்து.

சென்னைக்கு வடக்கெ கோட்டையர் (Kottaiyar) ஆற்றுப் படுக்கையில் பழங்கற்காலச் சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டன. தென் சென்னையிலுள்ள அதிராம்பக்கத்தில் (அச்சுறுபாக்கம்) கைக்கோடரிகள் கண்டெடுக்கப்பட்டன. இதன்படி பழங்கற்கால மனிதர் நிரந்தரமாக ஒரிடத்தில் இருப்பவராக அன்றி அலைந்து திரிபவர்களாகவும் காய்கனிகள், மிருக இறைச்சி உண்டு வாழ்பவராகவும் இருந்துள்ளனர். இக்கால மனிதர் எதனையும் உற்பத்தி செய்யவில்லை. சூழ என்ன உண்டோ அதனையே உணவாக உண்டு உயிர் வாழ்ந்தனர்.

**இடைக் கற்காலச் சின்னங்கள்:-**

மெசோலிதிக்கால (இடைக் கற்கால) மனிதர்கள் வாழ்ந்த தடத்தினை இராமநாத புரம் திருநெல்வேலிப் பகுதியிலும்மதுரைக்கு அருகிலுள்ள பக்திகளிலும் கண்டுபிடித்தனர். இங்கும் கற்காலத்துக்குரிய கைக்கோடரிகள் சில கண்டெடுக்கப்பட்டன. இங்கு Agate, Jaspan போன்ற பல்வேறு கற்களினாலும் செய்யப்பட்ட பல கருவில் கிடைத்தன. இங்கு கற்களை ஈட்டி நுனிக் கம்புநுனிகளுக்குப் பயன்படுத்திய சான்றுகள் கிடைத்துள்ளன. இத்தடயங்கள் சில திருநெல்வேலிப் பகுதியிலுள்ள சோயபுரத்திலும் கிடைத்துள்ளன். சென்னர் என்னும் ஆய்வாளர் இதனை கி.மு 4000ஆண்டுக்குரியதெனக் கணிப்பிடுவர். (இத்தகையகற்கருவிகள் தமிழ் நாட்டுப்பாவனையில் இருந்த காலத்தில் எகிப்தில் பிரமிட்டுக்களைக் கட்டும் காலம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.)

**புதிய கற்காலச்சின்னங்கள்:-**

நியோலிதிக் காலத்தில் (புதிய கற்காலத்தில்) வேகமான வளர்ச்சிமனிதர் கையாண்ட கருவிகளில் ஏற்பட்டுள்ளது. இது மனிதரின் வாழ்க்கை முறையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இக்காலத்தில் மனிதர் மந்தைகளைப் பழக்க ஆரம்பித்திருந்தனர். தானியங்கள், பூண்டுகளை விதைத்து அதிலிருந்து பயன்பெறும் முறையை அறிய ஆரம்பித்தனர். விவசாயத்தின் ஆரம்ப நிலையில் இம்மக்கள் இருந்தனர். நெருப்பைக் கண்டுபிடித்து உபயோகிக்கத் தொடங்கியதும் இக்காலத்திலே தான் எனலாம். இந்நாகரிகம் உருவான பகுதியினையும் கருவிகளையும் புறூஸ் பூட்டே கண்டு பிடித்தார். மிகவும் செம்மைபப்படுத்தப்பட்ட கைக்கோடரி, சுத்தியல்.ஆகிய கருவிகளை சேலம் பகுதியிலுள்ள சிவோரி (Shevory) மலைப்பகுதியில் இவர் கண்டெடுத்தார். வட ஆர்க்காட்டுப் பகுதியில் திருந்திய நிலையிலிருந்த மண்வெட்டிகளை எஸ்.ஆர்.ராவ் கண்டெடுத்தார். மட்பாண்டமும் இங்கு கண்டெடுக்கப்பட்டது. மட்பாண்டம் பொருளாதார வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிப்பது. சேமிப்பின் அடையாளம் அது. விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஏற்பட்டஉபரி சேகரிக்கப்படும் பாத்திரம் அது.

**நகைச்சுவைத் துணுக்கு**

கும்பகர்ணன் நாளெல்லாம் தூக்கத்திலேயே கிடந்தானே! ஏன் ராமு அப்படி"?



''அவனுக்கு இராவணன் மந்திரிப்பதவிகொடுக்காத காரணமாக இருக்கலாம்சார்!"

**-பேராசிரியர் சி.மௌனகுரு-**

நியோலிதிக் காலத்தில் (புதிய கற்காலத்தில) இரண்டு விதமான தொழிற்சாலைகளும் (Factories) தொழிலுற்பத்திகளும் (Industry) இருந்தன எனஆய்வாளர் கூறுவர். (தொழிற்சாலை, தொழிலுற்பத்தி என்பதனை இன்றைய அர்த்தத்தில் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது) அவையாவன பானை தயாரிக்கும் தொழிலும் தொழிற்சாலையும், கருவிகள் தயாரிக்கும் தொழிலும் தொழிற்சாலையும்.

சிவப்பு, கறுப்பு, பிறவுண், நிறங்களில் வித்தியாசமானமட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டன. அந்த மட்பாண்டங்களில் சிறிதளவு அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன. இம்மட்பாண்டங்கள் கைகளினாலேயே செய்யப்பட்டிருந்தன. (சக்கரம் போன்ற கருவி பாவிக்கப்படவில்லை.) புதிய கற்காலத் (நியோலிதிக் காலத்) தமிழர் 18 விதமான முறையில் 67 வகையான மட்பாண்டங்களைத் தயாரித்திருந்தனர் எனத் தொல் பொருளியலாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பலவகையான மட்பாண்டக் கருவிகளுக்கும் அப்பால் பல வகையான கைக்கருவிகளையும் நியோலிதிக் காலத் தமிழர் உற்பத்தி செய்தனர் எனத் தொல் பொருளியலாளர் கண்டுபிடித்துள்ளனர். கோடரிகள், சுத்தியல்கள், கூர்மையான ஆயுதங்கள் என்பன இவற்றுள் சில. இவை யாவும் நியோலிதிக்காலமக்கள் பெற்ற வளர்ச்சியைக்காட்டுகின்றன.

பலியோலிதிக் காலத்தில் (பழங் கற்காலத்தில்) உணவுதேடி வாழ்ந்த தமிழர்கள், மெசோலிதிக் காலத்தில் (இடைக்காலத்தில்) உணவைச் சேகரிக்கத் தொடங்கி, நியோலிதிக் காலத்தில் (புதிய கற்காலத்தில்) உணவை உற்பத்தி செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். உணவு தேடுதல் வேட்டையாடும் காலம் (Hunting stage) உணவைச் சேகரித்தல் உணவு சேகரிக்கும் கா்லம் (Gathering stage)இது சற்று வளர்ச்சி பெற்ற காலமாகும். உணவை உற்பத்தி செய்தல் (Producing stage) நிலைபதியாக இருக்கும் காலம் இது மேலும் வளர்ச்சி பெற்ற காலமாகும்.

வேட்டையாடும் காலத்திலிருந்து உணவு உற்பத்தி செய்யும் காலத்துக்கு புராதன தமிழர் உடனே வந்து விடவில்லை. இடைக்காலத்தில் அவர்கள் செய்த மந்தை மேய்ப்பு, வீட்டுப் பிராணிகளை (ஆடு, மாடு, கோழி, பன்றி என்பனவற்றை) உணவுக்காகவும், வேலை செய்வதற்காகவும் வளர்த்தல், இவற்றைப் பாதுகாக்கநாயை வளர்த்தல் என்பனவெல்லாம் வேட்டையாகும் காலத்திலிருந்து உணவு உற்பத்தி வரை மனிதகுலம் தாம் வளர எடுத்த முயற்சிகளாகும்.

உணவு உற்பத்தி செய்யத் தொடங்கிய பின்னரே புராதன தமிழர் முன்னேற்றத்தின் முதற்படியில் கால் வைக்கின்றனர். ஆரம்பத்தில் புராதன தமிழர் சமவெளியில் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை மேட்டுப் பாங்கான பகுதிகளிலேயே மேற் கொண்டனர். எனத் தொல்லியலாய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நியோலிதிக் காலத்திலே தான் தமிழ்நாட்டுக்கு இரும்பு அறிமுகமாகின்றது. நியோலிதிக் காலத்தின் தனித்துவமும் இதுவே. தமிழ் நாட்டின் சிந்துவெளி நாகரிகம் போல செப்புக் காலம் இருக்கவில்லை.புதிய கற்காலத்தையடுத்து நெராக இரும்புக் காலத்துக்குள் தமிழ்நாடு சென்று விடுகிறது.

இந்நியோலிதிக் காலம் மிக நீண்ட கால்ம் நிலவியது என்பர் தொல்லியலாளர்கள். கி.மு.3000 லிருந்து கி.மு.1000 இன் நடுப்பகுதி வரை (ஏறத்தாழ 2500 வருடங்கள்) இக்காலம் நிலவியது என்பர்.

இந்நியோலிதிக் காலத்தைத் தொல்லியலாளர்கள் மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளனர்.

1. கி.மு.2800-2000
2. கி.மு.2000-1800
3. கி.மு.1800-500

நியோலிதிக்கின் மூன்றாவது காலகட்டத்திலே தான் உலோகத் தொழிநுட்பத்தில் முக்கியமான வளர்ச்சிகள் ஏற்பட்டன. இக்காலத்திலே தான் இலக்கியங்கள் எழுந்தன. எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டது. பலியோலிதிக், மெசோலிதிக் ஆகிய இம்மூன்று கால கட்டங்களிலும் தமிழ் நாட்டில் வாழ்ந்த மனிதர்கள் யாவர்?

தொடரும

# சொத்துக் குவிப்பு வழக்கில் ஆளுனரை காப்பாற்றும் முயற்சியில் மர்மம்.

## -கருணாநிதி பரபரப்புப் பேட்டி-

(ராய்ட்டர்)

சொத்துக்குவிப்பு வழக்கில் ஆவணம் ஒப்படைக்க உத்தரவிட்ட பிறகு ஆளுனரைக் காப்பாற்றும் ஜெயலலிதா முயற்சியில் இறங்கியதற்கு மர்மம் உள்ளது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் மாலையில் நிருபாகள் பேட்டி கண்டனர். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி:- பாத்திமாபீவியை ஆளுனர் பதவியிலிருந்து நீக்கியது சரிதான் என்றும், அவர் குடும்பத்தினருக்கும், அவருடைய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்டாரென்றும் பா.ஜ.க. செயலாளர் இல.கணேசன் இன்று கூறியிருப்பதைப் பற்றி?

பதில்:- அவர் சொன்னதெல்லாம் உண்மைதான். ஜெயலலிதா அப்போது முதலமைச்சராக அந்தக் ஆளுனரால் ஆக்கப்பட்டதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கில் உச்ச நீதி மன்றம் அவருடைய செயலை ஏற்காமல் கருத்து தெரிவித்தது.

கேள்வி:- இன்றைக்கு நடைபெற்ற பா.ஜ.க. உயர் மட்டக் குழு கூட்டத்தின் மத்தியில் நடைபெற்ற கடந்த கால ஆட்சிக்கு எதிராக காங்கிரசார் இடையூறு செய்ததை நீங்கள் தீவிரமாக எதிர்க்கவில்லை என்பதைப் போல சொன்னார்களே, பதில்:- நான் அப்போதே முரசொலியில்



எழுதியிருக்கிறேன். நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்களாக அப்போதிருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் போன்றவர்களைப் பேச விடாமல் செய்த போதும், அவையை ஒத்திவைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியபோதும் அது தவறான முறை என்பதை நான் சுட்டிக்காட்டி எழுதியிருக்கிறேன். இப்போதும் அதைத்தான் சொல்கிறேன். ஆனால் அப்போது நடந்ததைவிட நூறு மடங்கு அதிகமாக இப்போது பா.ஜ.க. அணியினர் பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவிக்கிறார்கள். ஒரு கோரிக்கை நிறைவேறிய பிறகும் கூட அத்வானி போன்றவர்கள் நாங்கள் போராடித்தான் தீருவோம் என்று போராடுகிறார்கள். உதாரணம் கர்நாடகத்தில் உமாபாரதி மீது போடப்பட்ட வழக்கு வாபஸ் வாங்கப்படும் என்று அறிவித்த பிறகும்கூட நாங்கள் அறிவித்த போராட்டத்தை வாபஸ் வாங்கமாட்டோம் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் தாங்கள் வெற்றி பெற முடியாமல் எதிரணி வெற்றி பெற்றுவிட்டது என்ற ஆதங்கத்தில் தோல்வியைத் தாங்க முடியாமல் மத்தியில் அமைந்துள்ள ஆட்சியைக் கலைத்துவிட வேண்டும், அல்லது கவிழ்த்துவிட வேண்டும் என்பதற்காக இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

கேள்வி:- ஆளுனர் விசயத்தில் நேற்று முன்தினம் நீங்கள் கொடுத்த அறிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து இன்று முதலமைச்சர் கடுமையாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். இந்த ஆளுனரே தமிழகத்தில் நீடிக்க வேண்டுமென்ற முயற்சியில் இப்போது முதலமைச்சர் ஈடுபட என்ன காரணம்,

பதில்:- அந்த மர்மங்களையெல்லாம் நான் வெளியிட விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு முதலமைச்சர் கொடுத்த அறிக்கையில் என்னைப் பற்றி மூன்று நான்கு பொன்மொழிகளை உதிர்த்திருக்கிறார்.

# உலக செய்திகள்

## சாதிச் சான்றிதழ் கிடைக்காததால் மாணவி தற்கொலை உறவினர் மறியல் போராட்டம்

(ராய்ட்டர்)

சாதிச் சான்றிதழ் கிடைக்காததால் மாணவி தற்கொலை செய்து கொண்டதில் பிணத்தை வாங்க மறுத்து பழங்குடியினர் புதுவை சட்டசபைக்குள் நுழைய முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

புதுவை வில்லியனூர் அருகே உள்ள அரும்பார்த்தபுரம் பகுதியை சேர்ந்தவர் தொப்புளான். கூலித்தொழிலாளி. இவரது மகள் லலிதா என்ற செல்வி (வயது 16). கொம்பாக்கம் அரசு பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தார். இவருக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத சாதிச் சான்றிதழ் கேட்டனர். இதற்காக செல்வியின் தந்தை வில்லியனூர் தாலுகா அலுவலகம் சென்று சாதிச் சான்றிதழுக்கு விண்ணப்பம் கொடுத்தார்.

ஆனால் புதுவையில் பழங்குடியின சாதிகள் இன்னும் அறிவிக்கப்படாததால் மாணவி செல்விக்கு சாதி சான்றிதழ் அதிகாரிகள் கொடுக்கவில்லை. சாதிச் சான்றிதழ் கொடுக்காததால் செல்வியை பள்ளியை விட்டு ஆசிரியர்கள் வெளியேற்றி விட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த 15 நாட்களாக செல்வி பள்ளிக்குச் செல்லாமல் சோகத்துடன் காணப்பட்டார். டாக்டருக்கு படிக்க நினைத்தேன், எனது ஆசை நிராசையாகிவிட்டதே என்று வீட்டில் உள்ளவர்களிடம் புலம்பி அழுதாராம். இந்த மன வேதனையின் உச்சகட்டமாக துக்கம் தாங்



காமல் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குபோட்டு தற்கொலை செய்துகொண்டார்.

அவரது உடலை பொலிசார் கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் நடந்தது. அப்போது மருத்துவமனை முன் செல்வியின் பெற்றோர் உறவினர்கள் மற்றும் பழங்குடி இனத்தினர் திரண்டனர். செல்வியின் பிணத்தை வாங்க மறுத்து போராட்டம் நடத்தினர்.

பின்னர் அவர்கள் சட்டசபை நோக்கி வந்தனர். சட்டசபை உள்ளே நுழைய முயற்சித்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. காவலர்கள் அவர்களை தடுத்து சட்டசபை கேட்டை இழுத்துப் பூட்டினர். இதைத் தொடர்ந்து நுழைவாயில் முன் சாலையில் பழங்குடி இனத்தினர் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சேலம் அருகே மாணவன் உயிரோடு மண்ணெண்ணை ஊற்றி எரிப்பு



(ராய்ட்டர்)

சேலம் அருகே 3-ம் வகுப்பு மாணவன் மீது மண்ணெண்ணை ஊற்றி தீவைக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிசார் 2 பேரை வலைவீசி தேடிவருகிறார்கள். சேலம் அருகே உள்ளது இளம்பிள்ளை. இந்த ஊரை அடுத்துள்ள கிருஷ்ண செட்டியூர் நாவிதர் தெருவை சேர்ந்தவர் ராஜமாணிக்கம் மல்லிகா இவர்களுடைய மகன் விஜய். இவர்களில் விஜய் அங்குள்ள பள்ளி ஒன்றில் 3-ம் வகுப்பு படித்து வருகின்றான். சம்பவத்தன்று ராஜமாணிக்கமும்,அவரது மனைவியும் வேலைக்குச் சென்றிருந்தனர். அப்போது மலம் கழிக்கச் சென்ற சிறுவன் விஜய் வீட்டிற்கு வந்து கால் கழுவிக்கொண்டு இருந்தான்.

அங்கு வந்த 2 பேர் விஜய் மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்தனராம். விஜயை உயிரோடு எரித்துக் கொல்ல முயற்சி செய்தனர். இதில் பலத்த தீக்காயம் அடைந்த விஜய் சிகிச்சைக்காக ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கபட்டான். பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இங்கு அவனது நிலைமை கவலைகிடமாக உள்ளது.

## தீவிரவாதிகளிடம் 42 நாட்களாகச் சிக்கி தவித்த மூன்று இந்தியர்கள் விடுதலை



(ராய்ட்டர்)

ஈராக் தீவிரவாதிகளிடம் 42 நாளாக சிக்கித் தவித்த 3 இந்தியர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை மத்திய அரசு மும்பைக்கு அழைத்து வருகின்றது.

ஈராக் நாட்டில் குவைத் நிறுவனத்துக்காக லொரி ஓட்டிய 7 பேர் ஈராக் தீவிரவாதிகளால் கடந்த ஜூலை 21-ந்திகதி கடத்தப்பட்டார்கள் அல்லவா, அந்த 7 பேரில் 3 இந்தியர்களும் அடங்குவார்கள். மற்ற 4 பெரும் எகிப்து மற்றும் கென்யா நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

பிணைக்கைதிகளை விடுவிக்க குவைத் லொரி நிறுவனம் கடுமையாக பாடுபட்டது. பல தடவைகள் தீவிரவாதிகளுடன் மறைமுகப் பேச்சுவார்த்தை நடத்தியது. அப்போது தீவிரவாதிகள் பல்வேறு நிபந்தனைகளை விதித்தனர். குவைத் கல்ப்லிங்க் நிறுவனம் இனிமேல் ஈராக்கில் லொரி ஓட்டக் கூடாது. பலூஜா நகரில் அமெரிக்க விமான குண்டு வீச்சில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு தர வேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தினர்.

இந்தநிலையில் ஈராக்கில் இனிமேல் பணி புரியக்கூடாது என்ற கோரிக்கையை குவைத் கல்ப் லிங்க் நிறுவனம் கடந்த மாதம் ஏற்று அதன் பணிகளை நிறுத்திக் கொண்டது.

இதையடுத்து பிணைக் கைதிகளைக் கடத்தி வைத்திருந்த கருங்கொடி என்ற தீவிரவாத அமைப்பினர் நேற்று முன்தினம் அந்த 7 பேரையும் விடுவித்தனர். அல்-அரேபியா தொலைக்காட்சி இந்தச் செய்தியை நேற்று முன்தினம் அறிவித்தது.

குவைத் கல்ப்லிங்க் நிறுவனச் செய்தித்தொடர்பாளர் ரானா அபு செய்னாவும் அதை உறுதிப்படுத்தினார். அவர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-


எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த 7 பிணைக்கைதிகளும் கடவுள் அருளால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் நல்ல உடல்நிலையுடன் ஆரோக்கியமாக உள்ளனர். எங்கள் நிறுவன பிரதிநிதிகள் அவர்களை பார்த்துப் பேசியுள்ளனர்.

பிணைக்கைதிகள் 7 பேரும் தற்போது எங்கள் வசம் உள்ளனர். அவர்களை குவைத்துக்கு கொண்டு வர ஏற்பாடு செய்து வருகிறோம். தீவிரவாதிகள் பிணைத்தொகை, நஷ்டஈடு எதுவும் கேட்கவில்லை.

## ரஷ்யாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை சிறார்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்

ராய்ட்டர்

பெஸ்லின்- ரஷ்யா உடலெங்கும் பயங்கரமான வெடிபொருட்களைக் கட்டிக் கொண்டு ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் செச்செனியா எல்லையிலுள்ள ஒரு பாடசாலையில் உட்புகுந்து நூற்றுக்கும் மேலான பாடசாலைச் சிறுவர்களை பணயக் கைதிகளாக வைத்துள்ளதுடன் இரண்டு பெற்றோர்களையும் சுட்டக் கொண்டிருக்கின்றார்கள் இந்தப் பாடசாலைச் சுற்றுப்புறத்தை ரஷ்யப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர் இந்தப் பரிதாபமான சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றிருக்கின்றது. இந்தக் குழந்தைகளில்



ஒன்று அதிஸ்டவசமாகத் தப்பி வந்து பொலிசாரின் கையில் தஞ்சமடைந்துள்ளது.

இதே நேரம் ஏறக்குறைய ஒரு டசின் மக்கள் வகுப்பறையின் பின் பகுதியில் உள்ள பொலிசாரின் அறைக்குள் ஒரு வாறு கஸ்டப்பட்டு தப்பி வந்திருக்கின்றார்கள். என்றும் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. இது செச்சினிய தீவிரவாதிகளின் வேலையென்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தைக் கேள்வியுற்ற பெற்றோர் பாடசாலைக்கு முன்பாக சோகமே உருவாக உட்காந்திருப்தாகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும்படியும் கேட்டுள்ளதுடன் அரசாங்கத்தின் மேல் குற்றமும் சாட்டியுள்ளனர்.

# ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் ஏழு விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றி

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இங்கிலா




ந்து நாட்டில் கமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் இங்கிலாந்து அணி 7விக்கெட்டுக்களால் வென்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியை இந்திய அணி துடுப்பெடுத்தாடப் பணித்தமைக்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

இல்மோகட்கைட் 50 ஓட்டங்களையும், விபியல் லக்ஸ்மன் 29 ஓட்டங்களையும், அணித்தலைவர் கங்குலி 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஒப், காமிஷன் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 32.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர்.

இதில் சோழங்கே 52 ஓட்டங்களையும் அல்ட பிளின்டோ ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், டராஸ் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், றிஸ்கேதிஸ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக பாலாஜி 2 விக்கெட்டுக்களையும் இர்பான் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# வட கிழக்கு மாகாண கிரிக்கெட் போட்டி தம்புள்ளையில்

வட மத்திய மாகாண கிரிக்கெட் சங்கம் மாவட்டங்களுக்கு இடையே 16 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளை நடத்தி வருகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாண மாவட்டக்களுக்கிடையிலான போட்டிகள் நேற்று முன்தினம் தம்புள்ளயில் ஆரம்பமாகியது. இதில் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பா ணம், மன்னார் ஆகிய மாவட்ட அணிகள் பங்கு கொள்கின்றன. இப்போட்டியில் முதல் இரு இடங்களைப் பெறும் மாவட்ட அணிகள் வட மத்திய மாகாண வெற்றியாளர்களுடன் மேதவுள்ள னர். நேற்று மாவட்ட அணியினர் வியாழக்கிழமை வவுனியா மாலட்டத்தை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணியினர் தம்புள்ள மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும், மன்னார் மாவட்ட அணியினரை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணியினர் தம்புள்ள ரண்கிரி மைதானத்திலும் மோதினர்.




# ஒலிம்பிக் மரதன் ஓட்டத்தின் முடிவில் மாற்றமில்லை

ஏதென்ஸ் ஒலிம்பிக் மரதன் ஓட்டம் முடிவை மாற்ற இயலாது என சர்வதேச தடகள கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஏதென்ஸ் ஒலிம்பிக் கடைசிப் போட்டியாக ஆண்களுக்கான மரதன் ஓட்டம் ஆகஸ்ட் 29 இல் நடந்தது. இதில் பிரேசில் வீரர் வாண்டர் லிமா முதல் நபராக ஓடிக் கொண்டிருந்தார். அப்போது கிரேக்க பாரம்பரிய உடை அணிந்த ஒருவர் இடையில் புகுந்து லிமாவை பிடித்து தள்ளியதோடுதாக்கினார்.

இந்தச் சம்பவத்தால் நிலை குலைந்து போன லிமா மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இதுவரை தாக்கியவர் அயர்லாந்தைச் சேர்ந்த முன்னால் பாதிரியார் கார்னிலியஸ் ஹோரன் என்று தெரியவந்தது. மனநிலை சரியில்லாத இவருக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்கிடையே மரதன்ஓட்ட வீரர்களுக்கு ஏதென்ஸ் ஒலிம்பிக் குழுவினர் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை என்று



பிரேசில் குற்றம் சாட்டியது. மருதன் ஓட்டப் போட்டியின் முடிவை எதிர்த்து சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்திடம் முறைப்பாடு செய்தது.

இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் குழுவின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், ''இந்தச் சம்பவம் மிகுந்த கவலை அளிக்கின்றது. ஒலிம்பிக் உணர்வுகளை மதித்து செயல்பட்ட லிமாவுக்கு உரிய கலவரம் அளிக்கப்பட்டது. நிறைவு விழாவின் போது இவருக்கு நவீன ஒலிம்பிக்கின் தந்தையான டி கூபர்ட்டின் நினைவுப் பதக்கம் அளித்து உற்சாகப் படுத்தினார். மரதன் முடிவை மாற்றுவது கடினம்" என்றார்.

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

*உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளின் விபரங்களை எழுதியனுப்புங்கள்.*

**அனுப்ப வேண்டிய முகவரி**
**விளையாட்டு முற்றம்**
**ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**

# எங்கள் குரல்

## கொக்கட்டிச்சோலைப் பொதுச்சந்தை ஏன் ஒழுங்காக இயங்குவதில்லை

மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை கிராமத்தில் அமைந்துள்ள பொதுச்சந்தை ஒழுங்காக இயங்காமல் மிகவும் அலங்கோலமான முறையில் காணப்படுகின்றது.

இப்பொதுச் சந்தையானது அமைக்கப்பட்டு ஏறத்தாழ நான்கு வருடங்களைக் கடந்த நிலையிலும் அதன் திருத்த வேலைகள் முடிவுறும்.

இந்தச் சந்தை இன்னமும் திறக்கப்படவில்லை. இச் சந்தையினைத் திறந்தால் படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் எழுவான்கரை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

தற்போது அம்பிளாந்துறை, கற்சேனை, களுமுந்தன்வெளி, கடுக்காமுனை, அரசடித்தீவு, பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா, முனைக்காடு, மகிழடித்தீவு போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் களுவாஞ்சிகுடி, காத்தான்குடி போன்ற இடங்களிலுள்ள சந்தைகளுக்குத்தான் செல்லவேண்டியுள்ளது. ஆனால் அவ்வாறு செல்வதானால் போக்குவரத்து ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது. இங்கு இரண்டு பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

எனவே அதனை அண்மையிலுள்ள பிரதேச சபையும், பிரதேச செயலகமும் பார்த்துக் கொண்டு பாராமுகமாய் இருக்கின்றார்கள் என்று இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். எனவே இது சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தீர்வு கண்டு தரவேண்டுமென மக்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

(சூர்யா)

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாரபட்சமா புறக்கணிப்பா, ஊழல் மோசடிகளா நீங்கள் ஈழநாதம் எங்கள் குரலுக்கு தகுந்த ஆதாரங்களுடன் அனுப்பி வையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.


**அனுப்ப வேண்டிய முகவரி**
**எங்கள் குரல்**
**ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**

# குன்றும் குழியுமாகக் காணப்படும் மண்முனை வரையான பிரதான பாதை

மண்முனை தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பட்டிப்பளைச் சந்தியில் ஆரம்பித்து மண்முனை வரையிலான பிரதான பாதை திருத்த வேலைகள் எதுவுமின்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதி பல வருடங்கள் திருத்தியவாறே காணப்படுவதாக இவ்வீதியினூடாகப் பயணம் செய்யும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி சுமார் 3 வருடங்களுக்கு முன்தான் இவ்வீதியில் திருத்த வேலைகள் செய்யப்பட்டது. தற்போது வரையும் இந்த வீதி திருத்தப்படாதவாறே காணப்படுகின்றது. மேலும் இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதியினூடாக 2 வாகனங்கள் பயணம் செய்ய முடியாதவாறு அகலம் குறைந்து காணப்படுகின்றது. இவ்வீதியின் இரு மருங்கிலும் மணற்கும்பங்களும் கற்களும் நிறைந்தவாறே காணப்படுகின்றதென பயணிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இவ்வீதியினூடாக பயணிகள் பயணம் செய்யும் போது பல இன்னல்களின் மத்தியில் பயணம் செய்கின்றார்கள். இந்த வீதி மிகவும் பிரதான வீதியாகவும் இந்த வீதியினூடாக பல பகுதி மக்கள் பயணம் செய்யும் வீதியாகவும் இந்த வீதி காணப்படுகின்றது.



*வாருவதோ மாரி மழை! கிரான் பிரதேசத்தில் புலிபாய்ந்த கல் ஊடாக பொண்டுகச்சேனை என்னும் கிராமத்திற்குச் செல்லும் வீதியிலுள்ள பாலத்தின் நிலைமையை படத்தில் காண்க. பாலத்தின் ஒரு பகுதியில் உள்ள பாதுகாப்புத் தூண்கள் கிடையாது. பாதையின் பலகையும் பல இடங்களில் சேதமடைந்திருப்பது, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் கண்களிலோ தென்படவில்லையா? என்று பொண்டுகச்சேனைக் கிராம மக்கள் கேட்கின்றார்கள்.*

*(படம்:- வி.பி. சிவப்பிரகாசம், அக்கரைப்பற்று)*

மேலும் இந்தப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் ஒரு திருத்தலமும் உண்டு. இந்தத் திருத்தலத்திற்கு பல பிரதேசங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தருகின்றார்கள். இவர்களின் வருகை பல அசௌகரியங்களுக்கு மத்தியில் உள்ளதாக மக்கள் மேலும் மேலும் விசனம் தெரிவிக்கின்றனர். இந்த வீதியை பொறுப்பேற்றுச் செப்பனிடுவதற்கு யாரும் முன்வருவதாகத் தெரியவில்லையெனவும், இவ்வீதியானது பல வருடங்களுக்கு முன்பு திருத்தப்பட்டதாகவும் மக்கள் குறைகூறுகின்றனர்.

மேலும் இவ்வீதியால் மழை காலங்களில் பயணம் செய்ய முடியாது. எனவே மழை காலம் தொடங்குவதற்கு முன் இவ்வீதியைத் திருத்தியமைக்க வேண்டுமெனவும் மக்கள் பயணம் செய்யும் போது எதுவித பிரச்சினையுமின்றி பயணம் செய்ய வேண்டுமெனவும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் உள்ளார்கள். எனவே இவ்வீதியைப் புனரமைத்து மக்களின் இன்னல்களைப் போக்கி மக்களுக்கு நன்மையளிக்க வேண்டும் ஏற்கனவே ஈழநாதம் பத்திரிகையில் பலதடவை இதுபற்றி சுட்டிக்காட்டியும் இதற்கு ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. மீண்டும் இதனை ஈழநாதம் ஊடாக பிரசுரிக்கின்றேன். இதற்குத் தீர்வு கிடைக்கும்வரை எனது பேனாமுனை ஈழநாதம் எங்கள் குரலில் பிரசுரித்துக் கொண்டேயிருக்கும்.

எஸ்.கதிரவேலு.




## சிந்தனைக்கு!

நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது

தமிழீழத் தேசியத் தலைவர்



ஈழநாதம்

மக்கள் தினசரி — மட்டக்களப்பு பதிப்பு

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை

தொலைபேசி : 065-2226110, 065-2226303

batti @ eezhanatham .com

03.09.2004


## சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் அக்கறை

போர்நிறுத்தத்ததை பலப்படுத்தி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் கொண்டிருக்கும் அக்கறை சிறிலங்கா அரசிடமும், தென்னிலங்கை சக்திகளிடமும் இல்லை. என்பது கவலைக்குரியது.

சர்வதேச ரீதியாக கண்ணோட்டம் செலுத்திப் பார்த்தால் உலக நாடுகளில் போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் இலங்கையும் ஒன்று.

தமிழ் மக்களின் தாயகம் இன்று பெரும் அழிவினைச் சந்தித்து, பொருளாதார ரீதியாக நலிவுற்றுக் காணப்படுகின்றது. சிறிலங்கா அரசால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட இந்த பொருளாதார அழிப்பில் இருந்து தமிழர் தாயகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இன்னுமொரு போர் மூழுமாயின் இன்று இருக்கும் நிலையில் தமிழர் தாயகம் இன்னும் பாரிய அவலங்களைச் சந்திக்க வேண்டி வரும். என்பது தற்போது சர்வ தேச சமூகம் புரிந்து கொண்ட உண்மை.

எனவே சமாதானப் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் முனைப்பு காட்டி வருகின்றது. ஆனால் சமாதானத்தை மீளக் கொண்டு வருவதில் சிறிலங்கா அரசு அக்கறையின்றி இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் போர்சண்டித்தனமான வார்த்தைகளை பிரயோ கித்து வருகின்றனர். ஆளும் கூட்டு முகாமில் அங்கம் வகிக்கும் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. தமிழ் மக்களின் பிரச்சினையைப் பேச்சுவார்த்தையினூடாக தீர்ப்பதற்குப் பதிலாக போரைத் திணிக்க முயற்சிக்கின்றது.

இதர சமாதானத்தை விரும்பாத சக்திகளும் போர்ச் சூழலை உருவாக்கக்கூடிய பௌத்த மேலாண்மை வாதக் கருத்துக்களை திணித்து விட முயற்சிக்கின்றன.

இதனால் தென்னிலங்கை மக்கள் குழம்ப வேுண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சி வாதத்தை ஏற்பதா? இல்லை ஆளும் தரப்பின் கூற்றினை ஆமோதிப்பதா? அல்லது சமாதானத்தை விரும்பாத சக்திகளுக்குப் பின்னால் செல்வதா? இவ்வாறு குழம்பும் தென்னிலங்கை மக்களிடையே சமாதானத்தை வலியுறுத்தும் சக்திகளின் குரல் அதிகளவில் ஒலிக்க வேண்டியது அவசியம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பிலிருந்து பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. இரண்டாயிரத்திற்கும் அதிகமான சிங்களவர்களை தமிழர் தாயகத்திற்குள் அள்ளிவந்து இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக முழக்கமிட்டது கவலைக்குரியது. சமாதானத்தைச் சிதறடிக்க மேற்கொள்ளும் சதிமுயற்சியே இது.

ஆயினும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, நோர்வேத் தரப்பினரின் பகீரத முயற்சிகள், விடுதலைப் புலிகள் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் கொண்டிருக்கும் உறுதிப்பாடு என்பன மீண்டும் ஒரு போர் என்ற பதட்டத்தை எட்டத்துரத்தியுள்ளது. இதனைவிட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் கடந்த இரு நாட்களுக்கு முன் மட்டக்களப்பிற்கு மேற்கொண்ட விஜயம் முக்கியத்துவம் மிக்கதாக நோக்கப்படுகின்றது.

இந்த வருகையின் பலனாக விரைவில் சிறிலங்காப் படைத் தரப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சந்திப்பு நடைபெறவுள்ளது. இச்சந்திப்பு பெறுமதி மிக்கதாக கருதப்படுவதுடன் எதிர்காலத்தில் போர்ப் பதட்டம் என்ற அச்ச நிலையை அகற்றி இரு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வழிவகுக்கும். கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் . இடம்பெற்ற படுகொலைகளுக்கு இச்சந்திப்பு முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்திற்கான நம்பிக்கையை படைத்தரப்பு மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

# தமிழ், முஸ்லிம்களின் உறவைச் சீர்குலைக்க தென்பகுதியிலிருந்து இனவாதிகள் இறக்குமதி

## பா. உ. அரியநேத்திரன்

(எம்.யுவராஜ்)

**வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்திற்கு தென்பகுதியிலிருந்து இனவாதம் இறக்குமதி செய்யப்படு கின்றது. தமிழ் முஸ்லிம் மக்களின் உறவை சீர்குலைக்கும் நிகழ்வாக் வடகிழக்குப் பூமியான கல்முனையில் 2000ம் சிங்களவர்கள் இறக்குமதி செய்யப்பட்டு வட கிழக்கு இணைப்புக்கு எதிராக கோசம் எழுப்பினர்**

இவ்வாறர்ன கோசங்களினால் தமிழ் தேசத்தை கூறு போட



முடியாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேந்திரன் கூறினார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தொழில் முன்பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தொடர்ந்து பேசுகையில்:-

எமது விடுதலைப் போராட்டத்திற்கு அத்திவாரமிட்டது கல்வியே ஆகும். கடந்த 1970ம் ஆண்டு சிறிலங்கா அரசினால் கொண்டுவரப்பட்ட கல்வி தரப்படுத்தல் கொள்கையின் அடிப்படையில் எமது தமிழ் பேசும் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியில் கணிசமான அளவு உட்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழ் மாணவர் அமைப்பு உருவாக்கம் பெற்று அதிலிருந்து விடுதலை இயக்கமாகப் பரிணாமம் பெற்றது.

வடக்குக் கிழக்கில் தொழில் வாய்ப்பு மட்டுமின்றி எதைப் பெற வேண்டுமானாலுல் எமது கையில் நிர்வாகம் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை வலியுறுத்தி வருகின்றோம் என்றார்.

# கல்முனை-கொழும்பு இரவு பஸ் சேவை நிறுத்தம் மக்கள் பெரும் அசௌகரியம்

(விரி.சகாதேவராஜா)

கல்முனை பஸ் டிப்போ பன்னெடுங்காலமாக நடாத்தி வந்த கல்முனை, இரத்தினபுரி, கொழும்பு இரவு நேர பஸ் சேவை தீடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பஸ்ஸில் பயணம் செய்யும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அத்துடன் பெரும் அசௌகரியத்தையும் எதிர்நோக்குகின்றனர்.

கடந் 27ம் திகதி முதல் எந்த முன்னறிவித்தலுமின்றி இப்பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இப்பஸ் சேவை நிறுத்தப்பட்டது தொடர்பாக வினாவிய போது பஸ் பழுது அல்லது பஸ் இல்லையென பதிலளிக்கப்படுகின்றதாம்.

இச்சேவையில் ஈடுபட்ட இரு பஸ்களில் ஒன்று மட்டக்களப்பு வழியாக கொழும்பு சேவையில் ஈடுபட்டுள்ளது. எனவே பஸ் பழுது என்று கூறப்படுவது நொண்டிச்சாட்டு எனக் கூறப்படுகின்றது.

எனவே கல்முனையிலிருந்து தினமும் சுமார் 10 தனியார் பஸ்கள் கொழும்பு செல்கின்றது. கூடிய கட்டணத்தில் அவற்றில் பயணிக்க பயணிகள் விரும்புவதில்லை. கல்முனை பஸ் டிப்போ மக்களுக்காகச் செயற்படுகின்றதா? அல்லது தனியாருக்காகச் செயற்படுகின்றதா? என்று பயணிகள் கேள்வியெழுப்புகின்றனர்.

# அம்பாறை மாவட்ட முன்பள்ளி மேம்பாட்டுக்குரிய நிருவாகக்கூட்டம்

(எம்.யுவராஜ்)

வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய அம்பாறை மாவட்டக் கிளையின் நிருவாகக் கூட்டம் அண்மையில் சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அக்கரைப்பற்று வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.சாகுல் ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிலையத்தின் எதிர்காலச் செயற்திட்டங்கள், அமைப்புக்கான நிதியீட்டல், காரியாலயம் அமைத்தல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந் நிகழ்வில் நிருவாகத்தின் செயலாளர் ஏ.ஜீ.ஹனீபா, பொருளாளர் ஜி.என். இஸ்மாயில் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.சற்குணம் உதயாழினி மற்றும் நிர்வாக உறுப் பினர்களும் கலந்து கொண்டனர்.மேலும் முன்பள்ளித் திட்ட சம்பந்தமான கலந்துரையாடலொன்று மேற்படி கல்லூரியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இக்கூட்டத்திற்கு வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையச் செயலாளர் கா.கணேசலிங்கம் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மாவட்ட ஆங்கில தினப்போட்டிகள்

(விரி.சகாதேவராஜா)

வடகிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் 09 கல்வி மாவட்டங்களில் எதிர்வரும் 11ம் திகதி மாவட்ட மட்ட ஆங்கிலதினப்போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

எழுத்துத்திறன் போட்டிகள் 9 கல்வி மாவட்டங்களுக்கும் 09 பரீட்சை நிலையங்களில் ஏக காலத்தில் நடாத்தப்படுமென்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.விசாக லிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் போட்டிகள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், முல்லைத்தீவு மாவட்டப் போட்டிகள் மாங்குளம் மத்திய கல்லூரியிலும் கிளிநொச்சி மாவட்டப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், மன்னார் மாவட்டப் போட்டிகள் மன்னார் புனித சேவியர் வித்தியாலயத்திலும், வவுனியா மாவட்டப் போட்டிகள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருமலை மாவட்டப் போட்டிகள் திருமலை புனித யோசப் கல்லூரியிலும், மட்டு. மாவட்டப் போட்டிகள் மட்.வின்சன்ற் மகளிர் கல்லூரியிலும், கல்முனைக் கல்வி மாவட்டப் போட்டிகள் சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியிலும் அம்பாறை மாவட்டப் போட்டிகள் அம்பாறை சத்தாதிஸ்ஸ மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. 11ம் திகதி காலை 8.30 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகுமென பணிப்பாளர் விசாகலிங்கம் மேலும் கூறினார்.

# தொண்டர் ஆசிரியர் நியமனம் இழுத்தடிப்பு

(வேதசகா)

வடக்கு-கிழக்கு தொண்டராசிரியர் நியமனம் மேலும் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று வாரங்களில் நியமனம் வழங்கப்படும் என்று மாகாணக் கல்விச் செயலாளர் தொண்டராசிரியர் ஒன்றியத்திடம் உறுதியளித்தவாறு நடைபெறவில்லை என்று ஒன்றியத் தலைவர் குற்றஞ்சாட்டுகின்றர். இதேவேளை ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் நியமனமும் இழுத்தடிக்கப்பட்டு வருவவ்தாக கூறப்படுகின்றது. புதிய அரசாங்கம் இவற்றுக்கு தீர்வுகாண வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர்.

## சாரணர் பாசறை

மாவடிப்பள்ளி அல்-அஷ்றப் மகா வித்தியாலயத்தில் சாரணர்களின் ஒரு நாள் பயிற்சிப் பாசறை கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் சாரணிய ஆசிரியர் எம்.எஸ்.முபாரக் தலைமையில் இடம் பெற்றது இதில் உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா கலந்து கொண்டார்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

## கணித விஞ்ஞான அறிவுப் போட்டியில் கல்குடா வலயத்தைச் சேர்ந்த இருவர் தெரிவு

(சி.பி.ஹரிச்சந்திரன்)

வடக்குக் கிழக்கு கணித விஞ்ஞான அறிவுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா வலயத்தைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றனர்.

கடந்த வாரம் 23.08.2004இல் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற போட்டியிலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கல்குடா கல்வி வலயத்தில் ஓட்டமாவடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த தரம் 9இல் கல்வி பயிலும் எம்.எஸ்.எம்.முபிஸ் வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் தரம் 11இல் கல்வி பயிலும் எம்.ஸ்ரீ.சரவணன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றவர் களாவர்.

இவர்களுக்கான பரிசை வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கலந்துகொண்டவர்களில் கல்குடா வலயத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

## மட்.மாவட்டத்தில் 85 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி

(பலுதுள்ளா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையுள்ள காலங்களில் சமுர்த்தி நிவாரண உதவிகள் பெறும் குடும்பங்களாக 85,050 பேர் உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அதிகார சபை உதவி ஆணையாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இவர்களின் மட்டக்களப்பு மாவட்ட வாழைச்சேனைப் பிரிவில் 3774 குடும்பங்களும் ஓட்டமாவடி பிரதேசப் பிரிவில் 4484 குடும்பங்களும் கோறளைப்பற்று மத்தியில் 4360 குடும்பங்களும், கிரான் பிரிவில் 3632 குடும்பங்களும், செங்கலடி பிரதேசப் பிரிவில் 11276 குடும்பங்களும் ஏறாவூர் நகர்ப் பகுதியில் 5592 குடும்பங்களும் மண்முனை வடக்குப் பகுதியில் 9710 குடும்பங்களும், வவுணதீவுப் பகுதியில் 350 குடும்பங்களும், பட்டிப்பளைப் பகுதியில் 4612 குடும்பங்களும், ஆரையம்பதிப் பகுதியில் 5200 குடும்பங்களும், காத்தான்குடிப் பகுதியில் 5640 குடும்பங்களும், களுவாஞ்சிக்குடிப் பகு தியில் 9332 குடும்பங்களும், வெல்லா வெளிப் பகுதியில் 8340 குடும்பங்களும் சமுர்த்தி உதவிகளைப் பெற்று வருவதாக தெரியவருகிறது.

**சிறிலங்கா...**

கிறார் என படைத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

திடீரென படைத்தளபதி குடாநாட்டிற்குச் சென்று படை நிலவரங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளமை குறித்து பொதுமக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

**இடம்பெயர்ந்து...**

டைக் கொடுப்பனவையோ பெற்றுக் கொள்ளாததால், பெரிதும் அவதியுறுவதைச் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி சமாதான செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பில், ஐ.நா. மனித உரிமைகளுக்கான அமைப்பின் சிறிலங்கா கிளைக்கான தலைவர் திரு.நீல்ஸ் றைற், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம், அகதிகளை மீளக்குடியமர்த்துவது மற்றும் பராமரிப்பது தொடர்பான தங்களது 2005ஆம் ஆண்டுக்கான திட்டத்தை முன்வைத்தார்.

தொடர்ந்தும் சிறிலங்கா அரசு ஆக்கிரமித்திருக்கும் தமிழ் பிரதேசங்களில் பெரும்பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயங்களாகவே பேணி வருவதனால் பல ஆயிரம் மக்கள் தொடர்ந்தும் பலவித துன்பங்களையும் அனுபவித்து வருவதைச் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன், இது குறித்து தொடர்ந்தும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் ஒத்துழைப்பையும் முன்னெடுப்புக்களையும் கோரினார். இச்சந்திப்பில் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் திரு.புலித்தேவனும் கலந்து கொண்டார்.

**மட்டு.அம்பாறை மாவட்ட கல்விப் பிரிவின் வேண்டுகோள்**

### மட்டு.அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலை

### அதிபர்களின் கவனத்திற்கு

**தங்களது பாடசாலைகளில் குடிநீர், மலசலகூடம், சுற்றுவேலி போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாத பாடசாலைகள் தமது தேவைகளை விண்ணப்பங்கள் மூலம் கீழ் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**மேற்குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**பொறுப்பாளர்**
**கல்விப் பிரிவுச் செயலகம்,**
**அரசியல்துறை,**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

## மீனவர்களின் பிரச்சினைக்கு விடுதலைப்புலிகள் சமரச முயற்சி

(நமது நிருபர்)

இழுவை மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் கரையோர சிறுதொழில் செய்பவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு ஒன்றின் விளைவான சம்பவத்தைப் பயன்படுத்தி யாழ். குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களின் பேரில் தேசத்துரோக சக்திகள் மிக மோசமான பரப்புரையை மேற்கொண்டு மக்களைக் குழப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூநகரி பாலாவி கிராமக் கடற்பகுதியில் குருநகரில் இருந்து வந்த இழுவை மீன்பிடிப்படகு ஒன்று நடைமுறைகளை மீறி கரையோரத்தில் இழுவைத்தொழில் செய்ய முற்பட்டபோது கரையோர சிறுதொழில் மீனவர்களுக்கும் இழுவைப்படகில் வந்தவர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. ஆனால் இதனைப் பயன்படுத்தி குருநகர் மக்களிடையே தேசவிரோத சக்திகளும், ஸ்ரீலங்காப் படைப் புலனாய்வு சக்திகளும் தமிழீழ விடுதலைப்புலிகளையும், மக்களையும் பிளவு படுத்தும் நோக்குடன் கொந்தளிப்பை ஏற்படுத்த முயன்றுள்ளனர்.

குருநகர் மக்களின் பெயரில் தேசவிரோத சக்திகள் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனை அடுத்து நிலைமைகளை தெளிவு படுத்தும் வகையில் குருநகர் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கப்பிரதிநிதிகள், பூநகரி மீன்பிடித் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல். சூசை அவர்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இதில் நடந்த சம்பவம் பற்றி குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது. இச்சம்பவம் ஆழ்ந்த கவலை அளிக்கும் சம்பவம் என்றும், இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு இனிமேல் வாய்ப்பளிக்கக் கூடாது என்றும் கேணல் சூசை அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இதனைப் பயன்படுத்தி தேச விரோத சக்திகள் குழப்பங்களை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் வேண்டினார். தொழில் ரீதியான பிணக்குகளின் விளைவே இது எனவும் இப்பிணக்குக்கு காரணமான இழுவை மீன்பிடி இவ்வாண்டுடன் முற்றாக நிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அது வரையான மூன்று மாதங்களுக்கு மீன்பிடித் தொழிலாளர்களிடையே பிணக்குகள் ஏற்படாது ஒற்றுமையைப் பேண இரு தரப்பு மீனவர்களும் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் வாரத்தில் வியாழன், சனி ஆகிய இரு நாள்களில் மீன் பிடிக்க அதற்குரிய கடல் எல்லையை வரையறை செய்தனர். இரு தரப்பு மீனவர்களும் தெளிவடைந்து சென்றனர். இக்கலந்துரையாடலில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## கஞ்சா வைத்திருந்தவருக்கு விளக்க மறியல்

(அக்கரைப்பற்று நிருபர்)

பொத்துவிலில் 5 கிலோ போதைப்பொருளை வைத்திருந்த மூன்று பேரை பொத்துவில் பொலிசார் கைது செய்து கடந்த 31ம் திகதி செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியபோது நீதிவான் ரி.எல்.ஏ.மனாப் எதிர் வரும் 13ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

**பல்வேறு...**

னோடிப் பயிற்சி அங்குரார்ப்பணம் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு மட்: மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம் தலைமை வகித்தார். மட். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், இளைஞர் சேவைகள் மாகாணப் பணிப்பாளர். பொன்.செல்வநாயகம், மாவட்டப் பணிப்பாளர் எஸ்.தவராசா ஆகியோர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

க.தங்கேஸ்வரி தொடர்ந்து பேசுகையில் கடந்த காலத்தில் எங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நியமனங்கள் கிடைக்கவில்லை. பல்வேறு பகுதிகளிலும் துன்புறுத்தப்பட்டோம். விடுதலைப்புலிகள் அரசுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நிலைமை சற்று சுமுகமாகியுள்ளது. ஆனாலும் போர் நின்று விட்டாலும் நமது போராட்டம் இன்றும் ஓயவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

**சித்திரவதை...**

ந்தனர்.

அங்கு வாடி நிர்வாகிகளால் பல்வேறு வதைகளுக்கு உள்ளான இச்சிறுவர்கள் அங்கிருந்து மூன்று தினங்களுக்கு முன்னால் தப்பி ஓடிவந்தனர். காட்டுப்பகுதியில் ஒழிந்திருக்கும் போது விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களால் இவர்கள் அவர்களது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பலத்த சித்திரவதைகளுக்கு இவர்கள் உள்ளாகியிருந்தனர். தொழிலுக்கு என்று அழைத்து வந்த நபர் மொழி தெரியாத ஓரிடத்தில் எங்களை அமர்த்தியிருந்தார் என்றும் இங்கு பலத்த கடினமான வேலைகளுக்கு தாங்கள் பணிக்கப்பட்டதாகவும் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்தி தாங்கள் தப்பி வந்ததாகவும் இவர்கள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

இவ்விடயம் உடனடியாக அரசியல் பொறுப்பாளர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சிறுவர்களை கையளிக்கும் போது விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் சிறுவர்களை தொழிலுக்காக அமர்த்துவது தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப நிலைமை காரணமாக சிறுவர்கள்தொழில் தேடிச் செல்ல வேண்டியுள்ளது.

இவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் நீங்கள் இச்சிறுவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அத்துடன் சிறுவர்களை தொழில் செய்ய நிர்ப்பந்திப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**இன்றைய...**

அபிவிருத்திக்குழு, சமுர்த்தி அலுவலர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், முச்சக்கர வண்டி சங்கத்தினருடனான கலந்துரையாடலில் செல்வா மேலும் தெரிவிக்கையில்:-

இன்று நாம் பலமாக இருக்கிறோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைகாலத்தில் தமிழ்த் தேசியத்தை சிதைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மக்கள் எம்மோடு இருந்ததால் முறியடிக்கப்பட்டது.

எனவே எதிர் காலத்தில் தமிழ்த் தேசியத்தை பலப்படுத்த அனைவரும் ஓரணி திரள வேண்டும் என்றார்.

**விடுதலைப்புலிகளின்...**

கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கோட்டைக்கல்லாறு வர்த்தக சங்கத் தலைவராக எஸ்.பழனித்தம்பியும், செயலாளராக மகாதேவனும், பொருளாளராக வி.ரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை பெரியகல்லாறு வர்த்தக சங்கத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது இதில் தலைவராக க.குணரெட்ணமும், செயலாளராக இ.தவசிங்கமும், பொருளாளராக க.குகதாஸூம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**வேலை ஆட்கள் தேவை**

✦ **விற்பனையாளர்கள்.**
✦ **வெயிற்டர்கள்.**
✦ **கொத்துரொட்டி.**

**வேலை தெரிந்தவர்கள், மேற்படி வேலையாட்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றது.**

**உடன் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.**

**சன்சைன் பேக்கரி**
**136, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**
**தொலைபேசி:- 2225159**

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 03-09-2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது